www.padippakam.com

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

"சிவப்பு_வெளுக்கிறது"

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் எமக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் குறித்து சில விளக்கங்களை அளிக்க விரும்புகின்றோம்.

கடந்த 19.2.86 அன்று அரசின் கூலிப்படைகள் யாழ்நகரை அண்டியுள்ள கிராமங்கள்மீது பாரிய குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. ஐந்து குண்டு வீச்சு விமானங்களும் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் தமிழர் பகுதிகளின் மீது மேற்கொண்ட வெறித்தாக்குதலில் 4 சிறுவர்கள் உட்பட 10 அப்பாவித் தமிழர்கள் உடல்கருகி மாண்டனர். பல வீடுகள் கடைகள் பலத்த சேதமடைந்தன. அன்று இரவு யாழ்ப்பாணம் கோட்டையில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் 5 கவச வண்டிகள் சகிதம் யாழ்நகரினுள் புகுந்து பீரங்கிகள் மூலம் குண்டுகளை வீசித்தாக்குதல்கள் நடத்தினர். அரசின் ஏவற்படைகள் நடத்த முற்பட்ட இந்த இன அழிப்பு நடவடிக்கைகளில் மேலும் ஒரு அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டார். இவர் பேக்கரி ஒன்றில் வேலைசெய்யும் பத்மநாதன் என்று அடையாளம் காணப்பட்டார். மேலும் பலர் படுமோசமாக காயமடைந்தனர்.

தகவல் அறிந்ததும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்தலத்திற்கு ; விரைந்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர். எமது தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாத கூலிப்படைகள் கோட்டையினுள் ஓடிஒழிந்துகொண்டன. இருப்பினும் இவர்கள் மீண்டும் வெளியில் வந்து தாக்குதல் நடத்தக்கூடும் என்ற சந்தேகத்தில் மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு எமது போராளிகள் தொடர்ந்தும் கோட்டைக்கு வெளியே காவல் புரிந்துகொண்டிருந்தனர்.

அப்போது உருமறைப்பு சீருடை அணிந்து ஆயுதங்களுடன் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர் நால்வர் நடந்து வந்துகொண்டிருந்தனர். அந்தநேரத்தில் சீருடை அணிந்த இராணுவத்தினரைத் தவிர வேறு எவரும் அவ் வீதிவழியாக வரச்சாத்தியமில்லை. போராளிகள் பொதுவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உருமறைப்புச் சீருடை அணிந்து தாக்குதலுக்கு செல்வதில்லை. அது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அவசியமற்றதொன்று. எனவே இராணுவத்தினர் என்று எண்ணி எம்மவர்கள் துப்பாக்கிகளை சுடுவதற்கு தயார்ப்படுத்தினர். இந்தச் சத்தம் கேட்டபொழுதாவது ஈபிஆர்எல்எவ் தோழர்கள் தம்மை இனங்காட்டி இருக்கலாம். [illegible] அவர்கள் எம்மை நோக்கி சுடுவதற்கு ஆயத்தமானார்கள். இதனால் வந்தவர்கள் இராணுவத்தினரே என்ற எமது நம்பிக்கை உறுதியானது.

இதனைத்தொடர்ந்து எமது வீரர்கள் இராணுவ வீரர் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். வேறு வழியின்றி தற்பாதுகாப்பிற்காக நாம் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது ஈபிஆர்எல்எவ்ஐச் சேர்ந்த அமீன் என்ற தோழர் கொல்லப்பட்டார். சிங்கள இராணுவம் என்று கருதியே ஈபிஆர்எல்எவ் தோழர்கள் மீது நாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டோம், என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகின்றோம். இது சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்து ஆகும்.

நிலைமை இவ்வாறு இருக்க, மறு நாள்காலை அதாவது 20.2.86, குருநகர்ப் பகுதியில் அரசியல் வேலைகளை மேற்கொள்ளும் ஜெயம் என்ற எமது உதவியாளர் ஒருவரை ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர் கடத்திச் சென்றனர். மேலும் யாழ் நகரம் முழுவதும் இறந்த தமது தோழருக்கு

படிப்பகம்

www.padippakam.com



அஞ்சலி செலுத்தும் வகையில் ஊர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரி பொதுமக்களிடம் மிருகத்தன-
மாக, நாகரீகமற்றமுறையில், நடந்துகொண்டனர். திறந்த கடைகளை மூடுமாறு கடை உரிமை
யாளர்களை அடித்துத் துன்புறுத்தினர். மூட மறுத்த கடைகளின் முன் வெடிமருந்துகளையும் வெடிகுண்
டுகளையும் வெடிக்கவைத்தனர். இதனால் பல கடைகள் சேதமடைந்தன. மிகவும் வெறுக்கத்தக்க,
அருவருக்கத்தக்க, வெட்கித்து தலைகுனியவேண்டிய இந்த நடவடிக்கைகளினால் பொதுமக்கள் மிகவும்
கொதிப்படைந்தனர். பொதுமக்கள் ஓட ஓட விரட்டப்பட்டு தாக்கப்பட்டனர். கடைகள் குண்டு
வீச்சினால் பலத்த சேதமடைந்தன. மொத்தத்தில் யாழ்ப்பாண நகரம் பெரும் அல்லோலகல்லோ-
லத்துக்குள்ளானது. இந்த வெறியாட்டத்தின்போது குண்டுகள் வெடித்ததினால் இரண்டு அப்பாவித்தமி-
ழர்கள் கொல்லப்பட்டனர். இதனால் மக்கள் கடுமையான கொதிப்பும் வெறுப்பும் அடைந்தனர்.
"மக்கள்" "மக்கள்" என்று அலறிய ஈபிஆர்எல்எவ் செந்தோழர்களின் மாயை அகலத்தொடங்கி
யது. போலி முகத்திரை கிழியத் தொடங்கியது. வார்த்தைஜாலங்களில்மிக்க ஜாலமயக்க முற்பட்ட
செந்தோழர்கள் இன்று மக்களுக்கு எதிராகவே தமது துப்பாக்கிகளை திருப்பிவிட்டனர். இதன்
மூலம் தம்மைத்தாமே இனங்காட்டிக் கொண்டனர். பசப்பு வார்த்தைகளினாலும், பசைவாளிகளா
லும் மக்கள் யுத்தம் புரிந்துகொண்டிருந்த செந்தோழர்கள், இன்று மக்களுக்கெதிரான ஆயுதப்-
போராட்டத்தை ஆரம்பித்துவிட்டனர். மக்களே பொய்யரையும் போராளிகளையும் இனங்கண்டு
கொள்ளுங்கள். கொள்ளையரையும் கோடாரிக்காம்புகளையும் புரிந்து கொள்ளுங்கள். மக்கள்
மக்கள் என்று வார்த்தைஜாலம் செய்துவிட்டு மக்களையே கொலைசெய்யும், மக்களிடமே கொ-
ள்ளையடிக்கும் காட்டுமிராண்டிகளை இனங்கண்டுகொள்ளுங்கள். மக்களே குழம்பாதீர்கள். போரா-
ட்ட வரலாற்றில் சில புல்லுருவிகளும் கோடாரிக்காம்புகளும் உருவாதல் சகஜமே. அவற்றை தூக்
கி எறியுங்கள். உண்மைப் போராளிகளை இனம் கண்டுகொள்ளுங்கள்.

மாறு
மேலும், 20.2.86 அன்று பாடசாலை மாணவர்களை பகிஷ்கரிக்கச்செய்யு செந்தோழர்கள் பல-
வந்தப்படுத்தினர்கள். பாடசாலைக்குச் சென்ற மாணவர்களை அடித்து துன்புறுத்தினர்கள். பாடசா
லை வாசல்களில் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன. சாவகச்சேரியில் பாடசாலைக்குச்சென்று
கொண்டிருந்த மாணவிகள் மீது ஈபிஆர்எல்எவ் செந்தோழர்கள் குண்டுவீசியதில் ஒரு சிறுமி
ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டாள். இதுதானா மக்கள் போராட்டம்? எமது மக்களையும்
மழலைகளையும் குண்டு வீசிக்கொல்வதுதானா? - இவர்களது போராட்டம். அப்படியாயின் ஸ்ரீலங்-
கா அரசின் ஏவல் நாய்களான கூலிப்படைகளுக்கும் இந்த மக்கள் விரோத சக்திகளுக்கும்
என்ன வித்தியாசம்? பிரச்சினைகளை எம்முடன் பேசித் தீர்ப்பதைவிடுத்து அப்பாவி மக்கள் மீது
கொடூரத் தாக்குதல் நடத்தும் செந்தோழர்களை மக்கள் புரிந்துகொண்டுவிட்டனர். ஆம் உண்-
மைகள் உறங்குவதில்லை.

கொதிப்படைந்த மக்கள் மறுநாள் 21.2.86, சாவகச்சேரிப்பகுதியில் செந்தோழர்களின்
அடாவடித்தனங்களை வெறியாட்டத்தைக் கண்டித்து தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக
பூரண ஊர்த்தால் ஒன்றை நடாத்தினர். எமது மக்களின் உணர்வுகள் உள்ளக்கொதிப்புகள் நன்கு
புலப்பட்டன. மக்கள் விடுதலைப்படையினரின் மக்கள் விரோத நடவடிக்கைகளினால் கொதிப்படை-
ந்த மக்களின் ஏமாற்றத்தின் வெளிப்பாடுகள் நன்கு புலப்பட்டன. ஆம் மக்களை ஏமாற்றிப்
பிழைப்பு நடத்திய செந்தோழர்களின் சுயரூபத்தை மக்கள் உணர்ந்துகொண்டனர். மேலும்
20.2.86 அன்று இரவு ஈபிஆர்எல்எவ் செந்தோழர்கள் எம்மீது இராணுவ நடவடிக்கை எடு-
க்குமுகமாக பதுங்கியிருந்தனர். அப்போது எமது வீரர்கள் வந்து விட்டதாகக் கருதி செந்தோ

படிப்பகம்

www.padippakam.com



ழர்கள் தம்மைத் தாமே சுட்டுக்கொள்கிறனர். அந்த குறுக்குச் சூட்டுச் சம்பவத்தில் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு தோழர் கொல்லப்பட்டார். செந்தோழர்களாலேயே தமது தோழர்களை இனங்காண முடியவில்லை, அப்படியிருக்க எம்மீது குற்றம் சுமத்துகின்றார்கள். பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதை விடுத்து இராணுவரீதியாக தீர்வுகாண செந்தோழர்கள் முனைந்தது ஏன்? மக்களே புரிந்துகொள்ளுங்கள்.

மேலும் 20.2.86 அன்று இரவு யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தியில் காவலுக்கு நின்ற எமது இயக்க உறுப்பினரான சுரேந்தர் என்பவர் மீது ஈபிஆர்எல்எவ் இயக்கத்தினர் திடீரென வாகனத்தில் வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர் ஸ்தலத்திலேயே கோரமாகக் கொல்லப்பட்டார். இதன்பின் இறந்த எமது தோழரது உடலையும் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர் எடுத்துச் சென்றுவிட்டனர்.

தகவல் அறிந்ததும் எமது தோழர்கள் ஸ்தலத்துக்கு விரைந்தனர். அப்போது ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர்கள் அங்கு இரண்டு வான்களில் வந்திறங்கி எமது தோழர்கள் மீது GPMG, LMG, துப்பாக்கிகள் போன்ற நவீனரக ஆயுதங்களை பயன்படுத்தி வெறித்தனமாகத் தாக்குதல் நடத்தினர். இனம்காண முடியாத சூழ்நிலையில் சந்தர்ப்ப சூழ்நிலைகாரணமாக நடைபெற்ற விபத்தில் ஒரு ஈபிஆர்எல்எவ் தோழர் கொல்லப்பட்ட சம்பவத்தை செந்தோழர்கள் நாம் வேண்டுமென்றே அவ்வாறு செய்ததாக கூறி தமது இரத்த வெறியைத் தீர்க்குமுகமாக மிருகத்தனமான முறையில் எமது தோழர் சுரேந்தரை கொன்றதோடல்லாமல் மீண்டும் எமது ஏனைய தோழர்கள் மீது வெறித்தாக்குதல் நடத்தினர். மக்களே இரத்தவெறிகொண்டோர் யார்? பலிகொள்வோர் யார்? புரிந்து கொள்ளுங்கள். விடுதலைக்காளிக்கு பலிகொடுப்பவர்கள் யாரென்று இனங்கண்டு கொள்ளுங்கள்.

தற்பாதுகாப்பிற்காக எமது தோழர்கள் பதில் தாக்குதல் நடாத்தி செந்தோழர்கள் 8பேரைக் கைதுசெய்தனர். மேலும் அவர்களிடம் இருந்த ஆயுதங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன. மேலும் சண்டையின்போது காயமடைந்த எமது தோழர் ஒருவரையும் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர்கள் பிடித்துச்சென்றனர். இதனால் காயமடைந்த எமது மற்றொரு தோழரை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு திரும்புகையில், மேலும் 4 ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர்களை (இரண்டு ஆண், இரண்டு பெண்) கைதுசெய்துகொண்டுவந்து எமது பாதுகாப்பில் வைத்திருந்தோம். நாம் இரத்தவெறிகொண்டவர்களாய் இருந்திருப்பின் எமது தோழர் ஒருவர் படுகொலைசெய்யப்பட்டு, மேலும் இரண்டு தோழர்கள் படுகாயமடைந்தநிலையில் நாம் கைதுசெய்த 12பேரில் யாரையாவது பழிவாங்கியிருக்கலாம். ஆனால் நாம் அவ்வாறு செய்யவில்லை. காரணம் அப்படிச்செய்தால் எமக்கும் இந்த இரத்த வெறிகொண்ட செந்தோழர்களுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லையென்றாகிவிடும். மக்களே புரிந்து கொள்ளுங்கள். 12 செந்தோழர்களையும் எமது பாதுகாப்பில் பத்திரமாக வைத்திருந்தோம்.

அடுத்த நாள் 21.2.86 காலை தட்டாதெரு சந்தியில் ஒரு இறந்த உடல் இருப்பதாக பொது மக்கள்கொடுத்த தகவலின்பேரில் நாம் அங்கு விரைந்தபோது ஈபிஆர்எல்எவ் தோழர் ஒருவர் AK சுரிகுழல் துப்பாக்கி ஒன்றுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார். இவரது பெயர் பிரதாபன் என்று தெரியவந்தது. இவரது உடலை எமது தோழர்கள் பாதுகாப்பாக எடுத்துவந்தனர். இவர் தவறுதலாக இவரது துப்பாக்கிவெடித்தபோதே இறந்திருக்கவேண்டும். ஏனெனில் இவரது தொண்டையூடாக பாய்ந்தகுண்டு தலை வழியாக வெளியேறி இருந்தது. வேறு ஒருவரினால் சுடப்படும்போது இப்படி நடக்க சாத்தியமில்லை. எனவே இவர் துப்பாக்கியை நிமிர்த்திவைத்திருந்தபோது தவறுதலாக துப்பாக்கி வெடித்ததனாலேயே இது சம்பவித்திருக்கிறது. இவருடன் எம்மீது வெறித்தாக்குதல் நடத்தியபோது ஏற்பட்ட குறுக்குச் சூட்டினால் 2 தோழர்களை ஈபிஆர்எல்எவ் இயக்கத்தினர் இழந்தனர். இது முற்றிலும் இவர்களது கவனக் குறைவால் ஏற்பட்டதே. இதைத் திரித்து நாம்தான் பிரதாபனை தமது தோழரை கொன்றுவிட்டதாக ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர் அப்பட்டமான பொய்களை

படிப்பகம்

www.padippakam.com



கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

மேற்படிசம்பவங்களில் ஈபிஆர்எல்எவ்ஐச் சேர்ந்த 3 தோழர்கள் உயிரிழந்தனர். எமது தரப்பில் ஒரு தோழர் படுகொலைசெய்யப்பட்டுள்ளார். நிலைமை இவ்வாறு இருக்க பொதுமக்கள் இதில் தலையிட்டு, இனங்காணமுடியாத நிலையில்தான் இந்தச் சம்பவம் நடந்தது என்பதை ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவருக்கு விளக்கினர். பொதுமக்களின் முயற்சியின்பேரில் நாமும் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவரைச் சந்தித்து நிலைமையை நன்கு விளக்கினோம். அத்துடன் நாம் பிடித்து வைத்திருந்த ஈபிஆர்எல்எவ் தோழர்களையும் அவர்களிடம் ஒப்படைத்தோம். பொதுமக்களின் முயற்சியால் இப்பிரச்சினை சமுகமானமுறையில் தீர்க்கப்பட்டது. ஈபிஆர்எல்எவ் இயக்கத்தினரின் ஆயுதங்களும், இறந்த தோழர் பிரதாபனது உடலும் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன. இதுவே நடைபெற்ற உண்மைச்சம்பவமாகும்.

நிலைமை இவ்வாறு இருக்க ஈபிஆர்எல்எவ் செந்தோழர்கள் உண்மைக்கு புறம்பான எவ்வித ஆதாரமுமற்ற நன்குகற்பனைசெய்யப்பட்ட செய்திகளை வெளிநாடுகளில் வெளியிட்டு பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

முதலாவதாக, 19.2.86, அன்று யாழ்ப்பாணம் கோட்டை இராணுவமுகாம் மீது தாக்குதல் நடத்த நவீன ஆயுதங்களுடன் வருமாறு நாமே தங்களை அழைத்ததாகவும், பின் தாங்கள் வந்ததும் நாம் வேண்டுமென்றே தமது தோழர் அவினை சுட்டுக்கொன்றதாகவும் அப்பட்டமான பொய்களை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். எமது தலைவர் 13 ஆண்டுகளுக்கு முன் எமது இயக்கத்தை ஆரம்பித்ததில் இருந்து நாம் எமது மக்களையும், எம்மையுமே நம்பி வளர்ந்துகொண்டிருக்கிறோம். நாம் எந்தக்கட்டத்திலும் இவர்களை தாக்குதலுக்கு வருமாறு அழைக்கவில்லை. இது அப்பட்டமான பொய்யாகும்.

மேலும் 6 வாகனங்களுக்கு குறைவாக தமிழீழத்தின் எந்தவொருபகுதியிலும் எந்தவொரு இராணுவ வீரனும் வரமாட்டான்- அப்படியிருக்க இங்கு எப்படி நான்குபேர் வந்தனர் என்று செந்தோழர்கள் பிதற்றுகின்றனர். தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் இராணுவத்தினர் சிறுகுழுக்களாக நடந்துவந்து, ஏற்கனவே சாலையின் அருகில் மறைந்திருந்து, அவ்வீதிவழியாக செல்லும் போராளிகள் மீது தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர். இப்படியான தாக்குதல்கள் அனைத்து இயக்கப் போராளிகள் மீதும் நடத்தப்பட்டிருக்கின்றது. இதை செந்தோழர்களால் மறுக்கமுடியுமா?

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அடாவடித்தனங்களைப் பொறுக்க முடியாமல் தம்முடன் ரெலோ இயக்கமும் இணைந்து எம்மை அடித்து விரட்டியதாக உளறுகின்றனர். செந்தோழர்கள் இவர்கள் அடாவடித்தனங்கள் என்று எதனைக் குறிப்பிடுகின்றார்கள் என்று தெரியவில்லை. செந்தோழர்கள் யாழ்நகரத்தில் ஒரு ஒழுங்குமுறையற்ற இராணுவ கும்பல் புரியும் அட்டகாசங்களை விட மிக மோசமானமுறையில் மக்களை தாக்கியதும் துன்புறுத்தியதும் கடைகளுக்குள் வெடிமருந்துகளையும் வெடிகுண்டுகளையும் வெடிக்கவைத்து அவற்றைச்சேதப்படுத்தியதும் நன்நெறிப் பண்புகளே!

பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தி பள்ளிச்சிறுமி உட்பட மூவரை மிருகத்தனமாக கொன்றது மக்கள் போராளிகளின் ஒழுக்கம் மிக்க உயர்ந்த நன்நடத்தையே! ஆனால் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு எவ்விதசெயலிலும் இறங்காமல் நிதானத்துடனும் விவேகத்துடனும் நாம் நடந்துகொண்டதே அடாவடித்தனம். செந்தோழர்களின் அகராதியில் அடாவடித்தனத்திற்கு இப்படி ஒரு அர்த்தம் இருக்கிறது. மக்களே புரிந்து கொள்ளுங்கள்.

எமது தோழர் சுரேந்தர் வேண்டுமென்றே நயவஞ்சகமான முறையில் இரத்தவெறிகொண்டலைந்த செந்தோழர்களினால் பலியெடுக்கப்பட்டபோதும், அமைதியாக நிலைகுலையாது பொறுமையுடன் 12 செந்தோழர்களைக் கைதுசெய்து அவர்களுக்கு எந்த தீங்கும் விளைவிக்காமல் பேச்சுவார்-

படிப்பகம்

www.padippakam.com



ம்
த்தை நடத்தி 12 செந்தோழர்களையூாதகாப்பாக ஒப்படைத்தோமே,-இதைத்தான் செந்தோழர்கள் அடாவடித்தனமென்கிறீர்கள்.- மக்களே புரிந்துகொள்ளுங்கள்.

மேலும் தமது வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கண்டு பொறுக்கமுடியாத தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிட்டே தம்மை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக மேலும் உளறுகின்றனர். மக்களின் சொத்துக்களை கொள்ளையிட்டும் மக்களைப்படுகொலைசெய்தும் பல அடாவடித்தனங்களைப்புரிந்து மக்களாலேயே வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர்கள் தமது வளர்ச்சியில் நாம் எரிச்சல் உறுவதாக கூறுவது நகைப்புக்கிடமானது.

மேலும்,சாவகச்சேரியில் இறந்த தமது தோழர் பிரதாபனுக்கு அஞ்சலிசெலுத்தும் வகையில் மக்கள் ஹர்த்தால் அனுஸ்டித்ததாக கதை அளக்கிறீர்கள்,செந்தோழர்கள். அப்பாவி பள்ளிச் சிறுமி இரத்த வெறியர்களான செந்தோழர்களால் படுகொலைசெய்யப்பட்டதைக்கண்டித்து, செந்தோழரின் சிவப்புச்சாயம் வெளுத்தநிலையில் அவர்களுக்கு தமது முழு எதிர்ப்பையும் தெரிவிப்பதற்காக சாவகச்சேரி மக்களால் நடாத்தப்பட்ட ஹர்த்தாலை தமது தோழருக்காக செய்யப்பட்டதாக நாக்கூசாமல் செந்தோழர்கள் புலம்புவது மிகவும் அருவருக்கத்தக்க வெட்கித்தலைகுனியவேண்டிய ஒரு விடயமாகும். "முழுப்பூசனிக்காயை சோற்றில் புதைக்க முயல்கிறீர்கள்". செந்தோழர்களே -உண்மைகள் உறங்குவதில்லை-மக்களே புரிந்து கொள்ளுங்கள்.

மேலும்,எமது அடாவடித்தனங்களைப் பொறுக்கமுடியாமல் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தவர்கள் எம்மீது நடத்திய தாக்குதலில் 4பேர் கொல்லப்பட்டதாக அரட்டுகின்றனர்,செந்தோழர்கள். இது முற்றிலும் அபாண்டமாகும். எமது தரப்பில் சுரேந்தர் என்ற தோழரே இரத்தவெறியர்களினால் பலிகொள்ளப்பட்டார்.எமது தோழர்கள் நால்வரைக் கொன்றுவிட்டதாக பறைசாற்றிக் கொள்வதன் மூலம் உண்மையில் இரத்தவெறிகொண்டோர் யார்? விடுதலைக்காளிக்கு பலி கொடுப்போர் யார்? என்பதை செந்தோழர்கள் தாமே ஒப்புக்கொள்கின்றனர். ஈபிஆர்எல்எவ் தோழர் ஒருவர் இனங்காணமுடியாத சூழ்நிலையில் விபத்துக்காரணமாக எம்மால் உயிர் இழந்ததற்கு பழிவாங்கும்முகமாகவே எமது தோழர்கள் 4 பேரைக் கொன்றுவிட்டதாக செந்தோழர்கள் கூறுகின்றனர். ஆகவே உண்மையில் இரத்தவெறிகொண்டோர் யார்? -மக்களே புரிந்து கொள்ளுங்கள்.

மேலும் எமது தோழர்கள் 4 பேர் கொல்லப்பட்ட நிலையில் நாம் வேறுவழியின்றி சமாதான முயற்சியில் இறங்கி தம்முடன் வந்து சமாதானம் பேசியதாக செந்தோழர்கள் அரட்டுகின்றனர். மக்களின் வேண்டுகோளை மதித்து,மக்களுக்காகவே நாம் சமாதான முயற்சியில் இறங்கினோம். இதை யாழ்ப்பாண மக்கள் நன்கறிவர். எனவே செந்தோழர்களின் இக் கூற்றை மக்களிடமே விட்டுவிடுகின்றோம். மேலும் இச்சம்பவம் குறித்து பொதுமக்களிடம் நாம் பொதுமன்னிப்புக்கேட்கவேண்டுமென்று செந்தோழர்கள் கூறியதாகவும்,அப்போது நாம் பொதுமக்களிடம் வேண்டாம் ஈபிஆர்எல்எவ் இயக்கத்திடம் பொதுமன்னிப்புக் கேட்கிறோம் என்று கூறியதாக செந்தோழர்கள் உளறிக்கொட்டியுள்ளனர். இதனை நாம் வன்மையாக மறுக்கிறோம். நாம் எந்த ஒரு கட்டத்திலும் அவ்வாறு கூறவில்லை. செந்தோழர்கள் நன்றாக கனவுகாண்கிறீர்கள். இச்சம்பவம் குறித்து எந்த சந்தர்ப்பத்திலும் நாம் மன்னிப்புக் கேட்கமாட்டோம். காரணம் இச்சம்பவம் முழுக்க முழுக்க ஈபிஆர்எல்எவ் இயக்கத்தினரின் தவறான போக்கினாலும்,அவர்களின் இரத்தவெறியினாலுமே பெரிதாக்கப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது. இதில் எந்தவொரு கட்டத்திலும் நாம் பிழையாக தவறாக நடந்துகொள்ளவில்லை. எனவே செய்யாத குற்றத்திற்காக நாம் மன்னிப்புக் கேட்போம் என்று செந்தோழர்கள் எதிர்பார்த்தால் அது அவர்களுடைய தவறாகும்.

படிப்பகம்

www.padippakam.com



"எமது தரப்பில் நீதியிருக்கிறது. நேர்மையிருக்கிறது. நியாயம் இருக்கிறது" இதனால் நாம் மன்னி-ப்புக்கேட்கவேண்டிய அவசியம் இல்லையென்பதை திட்டவட்டமாக தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

எனவே மக்களே பொய்யரை இனம் கண்டுகொள்ளுங்கள். புல்லுருவிகளை கோடாரிக்காம்புகளை தூக்கி எறியுங்கள். வார்த்தைஜாலக்காரரை கொள்ளையரை கொலைகாரரை இரத்தவெறிகொண்டலைவோரை புரிந்துகொள்ளுங்கள் குழப்பமுறுதீர்கள்-விடுதலைப்போராட்ட வரலாற்றில் இப்படியான சண்டைகள் உருவாவது சகஜமே. அவற்றை இனங்கண்டு ஒதுக்கி உண்மைப்போராளிகளை அரவணைத்து ஆதரித்து தொடர்ந்து எமது விடுதலைப்போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முனைப்புடன் போராட்டத்தில் ஈடுபடுவீர்கள் என்று நம்புகின்றோம்.

"தர்மம் வெல்லும் - உண்மைகள் ஒங்கும்"

அரசியற்பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

படிப்பகம்